## சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

**அ.வ எண்: 106/2011 வெங்கடேசன்(வாசா1) தேதி: 27.04.2026.**

**வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 3 முதல் 5 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

பிராதுடன் தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபடத்தின் படி கிழமேல் வடதலை, கிழமேல் தென்தலை இருபுறமும் 79 அடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே வரைபடத்தில் பி, எப் இடையே 63 அடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏ, ஈ இடையே 68 அடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எப், சி அளவு 16 அடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஈ, டி அளவு 11 அடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எப், சி, ஈ, டி பகுதிதான் 2ம் தபசில் சொத்து என்றால் சரிதான். பி, சி பகுதியாக 63 + 16 ஆக மொத்தம் 79 அடி என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஏ, டி பகுதி என்பது 68 + 11 ஆக மொத்தம் 79 அடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையம் வரைபடத்தில் B, B1 பகுதி 5 அடி என்றும், தென்புறத்தில் AY பகுதி 5–1/4 அடி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் B, B1, AY பகுதியில் இருந்தே எங்கள் இடம் துவங்குகிறது என்றால் சரிதான். B, B1, AY பகுதி நான் நடை பாதைக்காக விட்டுள்ள இடமாகும். ஆணையர் அறிக்கையில் B. B1 5 அடியும் சேர்த்து 68 அடி என அளக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையில் B பகுதியில் இருந்தும், A பகுதி இருந்தும் தான் எங்கள் கிழமேல் 79 அடி துவங்குகிறது என்றால் சரிதான். நான் நடை பாதைக்காக பிளாட்டுகளுக்கு மேற்கே

கிழமேல் 5 அடி அகலபாதை விட்டுள்ளதாக பிராதில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 2009ம் வருடம் நாங்கள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலும் மேற்படி கிழமேல் 5அடி அகல பாதைப்பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையின் படி B B1 5 அடி, B1 F 63 அடி, F C பகுதி 11 அடி ஆக மொத்தம் 79 அடி என்றால் சரிதான். AY பகுதி 5-1/4 அடி, YE பகுதி 66-3/4 அடி, ED பகுதி 7 அடி ஆக மொத்தம் 79 அடி என ஆணையர் அறிக்கையில் உள்ளது என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையில் FC பகுதி 11 அடி என குறிப்பிட்டுள்ள நிலையில், பிராதுடன் தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபடத்தில் FC பகுதி 16 அடி என குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் எங்களுக்கு குறைவு 16 அடி அங்குதான் உள்ளது. பிராதுடன் தாக்கல் செய்துள்ள மாதிரிவரைபடம் அளவுகள் சரியானதுதான். மாதிரி வரைபடத்தில் ED பகுதி 11 அடி என்றும், ஆணையர் வரைபடத்தில் ED பகுதி 7 அடி என்றும், குறிப்பிட்டுள்ள நிலையில் எனது மாதிரி வரைபடம் தவறு என்றால் எங்களுக்கு குறைவு 11 அடி அங்குதான் உள்ளது. பிராதுடன் தாக்கல் செய்துள்ள மாதிரிவரைபடம் அளவுகள் சரியானதுதான். பிராது தபசில் சொத்து விபரத்தில் 2ம் தபசில் சொத்தாக விவறிக்கப்பட்டுள்ள பகுதியானது, கற்பனையானது என்றாலும், அவ்வாறு ஒரு பகுதியே பூமியில் கிடையாது என்றாலும், சரியல்ல. B B1, B1 F பகுதி 63 + 5 ஆக மொத்தம் 68 அடி மட்டுமே பாத்தியம் என்றால் சரியல்ல. கிழமேல் 79 அடி எனக்கு பாத்தியப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி கிழமேல் 68 அடி மட்டுமே எனக்கு பாத்தியம் என்றாலும், மீதம் உள்ள 11 அடியில் FE பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சுவரில் கனம் பாதி 3/4 அடி போக மீதம் 10-1/4 அடி

மந்திதோப்பு சாலை விரிவாக்கத்திற்காக எடுக்கப்பட்டுவிட்டது என்றாலும் சரியல்ல. தென்பக்கம் மொத்தம் 72 அடி மட்டுமே பாத்தியம் என்றாலும், மீதவுள்ள 7 அடி மந்திதோப்பு சாலை விரிவாக்கத்திற்காக எடுக்கப்பட்டுவிட்டது என்றாலும் சரியல்ல. 2ம் தபசில் சொத்து என விவரிக்கப்பட்ட பகுதி பிரதிவாதிகளுக்குதான் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அது ஆக்கிரமிப்பு ஆகும். வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி காலம் சென்ற 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக கூறி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3, வா.சா.ஆ 4 ஆவணங்களில் உள்ள அளவுகள் சரியானவை தான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் 1998ம் வருடம் மார்ச் மாதத்தில் காம்பவுண்ட் சுவர் கட்ட ஆரம்பித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் 1998ம் வருடம் மார்ச் மாதமே காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டுவிட்டது என்றால் ஆட்சேபனை செய்தவுடன் கட்டுவதை நிறுத்திவிட்டார்கள். அதே அறிவிப்பில் 2001ம் வருடம் ஆரம்பத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டுமானம் கட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2001ம் வருடமே முழுமையாக காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டுவிட்டது என்றால் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுவிட்டது. 1998ம் வருடம் மார்ச் மாதத்தில் பிரதிவாதிகள் தரப்பில் கட்டுமானம் கட்டுவதற்கு குறியீடு மட்டுமே செய்யப்பட்டதாக நான் கூறுவது பொய் என்றாலும், அதற்கு முன்பே பிரதிவாதிகள் தரப்பில் அந்த காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டுவிட்டது என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.6 பதில் அறிவிப்பில் 1989ம் வருடமே இரு தரப்பிலும் பேசி காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டது என்றாலும், அதற்குரிய செலவு வகையில் எங்கள் தரப்பில் பாதி தொகை தரப்பட்டது என்றாலும் சரியல்ல. அந்த செலவு வகையில் பாதி

தொகை எங்கள் தரப்பில் தரவில்லை என கூறி மறுப்பு தெரிவித்து கூடுதல் அறிவிப்பு எங்கள் தரப்பில் அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக தான் பாதி பணம் கொடுக்கவில்லை என மறுக்கிறேன் என்றாலும், உண்மையில் எங்கள் தரப்பில் பாதி தொகை கொடுக்கப்பட்டுதான் அந்த கட்டுமானம் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. வரைபடத்தில் கண்ட 15 அடி அகல பாதை சம்பந்தமாகத்தான் OS No. 343/1982 என்ற வழக்கு கோவில்பட்டி டி.மு.கோர்டில் 1ம் பிரதிவாதிக்கும், காலம் சென்ற 1ம் பிரதிவாதி தாயார் சரோஜினி தேவிக்கும் நடந்தது என்றால் அந்த வழக்கு நடந்த விவரம் தெரியும். ஆனால் முழுமையான விவரங்கள் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் தரப்பு தாக்கல் செய்யப்பட்ட எதிர்கோரிக்கையை படித்துப்பார்த்துதான் எனது தரப்பில் பதில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:** 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.